மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 9-ம் நாள்
2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் நாள் செவ்வாய் கிழமை

**EP 22/2017/in/ OS 106/2010**

1. செல்வராணி
2. நிர்மலா
3. விமலா
4. சரவணப்பிரியா

:: மனுதாரர்கள் /வாதிகள்

**/எதிர்/**

தெய்வக்கன்னி :: எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதி

------

இம்மனுவானது 15-09-2023-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. சாகுல் ஹமீது, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பொன். கனகராஜ், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனு சொத்து ஜாபிதாவில் கண்டதும், எதிர்மனுதார் /1-ம் பிரதிவாதி வசம் உள்ளதுமான வாதிகளுக்கு மேற்படி தீர்ப்பாணையின் படி பாத்தியப்பட்டதும், கிடைக்க வேண்டியதுமான மனுவில் கண்ட 1 ஏக்கர் 74 செண்டில் மேற்குப் பக்கம் 87 செண்டை கம்பம் நகர சார் ஆய்வாளர் மற்றும் கம்பம் உத்தமபுரம் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களின் உதவியுடன் அளந்து மனுதார்கள் / வாதிகள் வசம் ஒப்படைக்க உத்தரவிடக்கோரி கட்டளை 21 விதி 35-ன் கீழ் மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.09.26 17:58:58 +0530

2) <u>மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு மனுச் சுருக்கம்.</u>

மனுதார்கள் / வாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண்.106/2010 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்குரை சொத்தில் வாதிகளுக்குரிய பேர்பாதி பாகத்தை நயமிடர் பார்த்து பிரித்துக் கொடுக்க வேண்டி இம்மனுவின் 1-ம் பிரதிவாதி மற்றும் பிற நபர்கள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் 22-10-2011-ம் தேதி வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையில் வாதிகளுக்கு வழக்குரை சொத்தில் மேற்கு பக்கம் 87 செண்டு பாகமாக கிடைக்கத்தக்கது என்று நேரடியாக இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்பாணையின் அடிப்படையில் பேர்பாதி பாகத்தினை நயமிடர் பார்த்து பிரித்து தரக்கோரி மனுதார்கள் / வாதிகள் தரப்பில் EP 38/2012 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் இருந்த நிலையில், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வாய்தா (steps) ஏற்பட்டிருந்த நிலையில், மனுதார்கள் / வாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பின்னர் EP 22 / 2017 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் EA 51/2019 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவின் பேரில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு , தாவா சொத்து அளவீடு செய்யப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே நீதிமன்ற ஆணையரின் அளவீட்டின் படி தாவா சொத்தில் மனுதார்கள் / வாதிகளுக்குரிய பாகத்தை பிரித்து தரக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதார் / 1-ம் பிரதிவாதி தரப்பு எதிர்உரை சுருக்கம்</u>**.

கிராம புலப்படத்தின் அடிப்படையில் கிராம சர்வே எண்.1603/1-ல் கண்ட 1 ஏக்கர் 74 செண்டு நிலத்தை அளவீடு செய்து அதில் மேற்குப் பக்கம் 87 செண்டு நிலத்தை அளந்து மனுதார்களுக்கு வழங்குவதில் ஆட்சேபனை இல்லை. 1-ம் பிரதிவாதிக்குரிய 87 செண்டு நிலம் அவருடைய சுவாதீனத்தில் வைத்து கிரையம் கொடுத்துவிட்டார். எனவே, சர்வே எண்.1603/1 நம்பரில் கண்ட 1 ஏக்கர் 74 செண்டினை கிராம FMB அடிப்படையில் சர்வேயர் மூலம்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.09.26 17:59:06 +0530

அளந்து அதில் மேற்குப் பக்கம் 87 செண்டினை மனுதாரர்களுக்குவழங்கிட ஆட்சேபனை இல்லை என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

5) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6) <u>பிரச்னைக்கான தீர்வு:</u>

மனுதார்கள் / வாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண்.106/2010 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்குரை சொத்தில் வாதிகளுக்குரிய பேர் பாதி பாகத்தை நயமிடர் பார்த்து பிரித்துக் கொடுக்க வேண்டி இம்மனுவின் 1–ம் பிரதிவாதி மற்றும் பிற நபர்கள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் 22–10–2011–ம் தேதி வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பாணையில் வாதிகளுக்கு வழக்குரை சொத்தில் மேற்கு பக்கம் 87 செண்டு பாகமாக கிடைக்கத்தக்கது என்று நேரடியாக இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்பாணையின் அடிப்படையில் பேர்பாதி பாகத்தினை நயமிடர் பார்த்து பிரித்து தரக்கோரி மனுதார்கள் / வாதிகள் தரப்பில் EP 38/2012 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் இருந்த நிலையில், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வாய்தா (steps) ஏற்பட்டிருந்த நிலையில், மனுதார்கள் / வாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன்பின்னர் EP 22 / 2017 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் EA 51/2019 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவின் பேரில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு , தாவா சொத்து அளவீடு செய்யப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே நீதிமன்ற ஆணையரின் அளவீட்டின் படி தாவா சொத்தில் மனுதார்கள் / வாதிகளுக்குரிய பாகத்தை பிரித்து தரக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.09.26 17:59:14 +0530

**7)** எதிர்மனுதார் / 1-ம் பிரதிவாதி தரப்பில் சர்வே எண்.1603/1 நம்பரில் கண்ட 1 ஏக்கர் 74 செண்டினை கிராம FMB அடிப்படையில் சர்வேயர் மூலம் அளந்து அதில் மேற்குப் பக்கம் 87 செண்டினை மனுதாரர்களுக்குவழங்கிட ஆட்சேபனை இல்லை என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8)** வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கு எண். 106 / 2010 வழக்கானது மனுதாரர்கள் / வாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள பேர்பாதி பாகத்தினை பிரித்து தரக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் கடந்த 22-01-2011-ம் தேதியன்று இரு தரப்பு விசாரணைக்கு பின்னர் வழக்குரை சொத்தில் மேற்கு பக்கம் 87 செண்டு மனுதார்கள் / வாதிகளுகக்கு பாகமாக கிடைக்கத்தக்கது என்று நேரடியாக இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**9)** மேற்கண்ட இறுதி நிலை தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்யும் பொருட்டு வாதிகளால் இந்த நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவில் EA 51/2019 என்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரிய மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் தாவா சொத்தில் வாதிகளுக்குரிய பாகத்தை ஒப்படைப்பு செய்ய இருந்த நிலையில், எதிர்மனுதார் தரப்பில் மேற்கண்ட ஆணையர் அறிக்கையை நீக்கறவு செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்திருந்த EA 2/2022 மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**10)** தற்போது இந்த மனுவிற்கு 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் மனுதார்கள் / வாதிகள் கோரியவாறு சர்வே எண்.1603/1 நம்பரில் கண்ட 1 ஏக்கர் 74 செண்டினை கிராம FMB அடிப்படையில் சர்வேயர் மூலம் அளந்து அதில் மேற்குப் பக்கம் 87 செண்டினை மனுதாரர்களுக்கு வழங்கிட ஆட்சேபனை இல்லை என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11)** இந்த அசல் வழக்கானது 2010-ம் வருடம் கோப்புக்கு எடுக்கப்பட்டு 2011-ம் வருடம் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. அசல் வழக்கின் தீர்ப்பாணை தேதியான 22-01-2011-ம் தேதி முதல் தற்போது வரை சுமார் 12 ஆண்டு காலமாக தீர்ப்பின் பலனை மனுதார்கள் / வாதிகள் பெற முடியாமல் நீண்ட காலம் கடந்துள்ளது தெரியவருகிறது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.09.26 17:59:23 +0530

**12)** அசல் வழக்கின் தீர்ப்பாணையின் அடிப்படையில் வழக்குரைச் சொத்தில் உள்ள வாதிகளின் பேர்பாதி பாகத்தினை 1-ம் பிரதிவாதி சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிட்டு, நிறைவேறுதல் மனுவை நிறைவேற்ற வேண்டிய கடமை இந்நீதிமன்றத்திற்கு உள்ளதாலும், மனுதார்கள் / வாதிகள் தரப்பு வாதம் இந்நீதிமன்றத்தின் தீர்ப்பாணை மற்றும் ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் நிரூபிக்கத்தக்கதாக உள்ளது என்பதாலும் மனு அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

**13**) இறுதியாக,

| | |
|---|---|
| 1. | EP 22/2017 மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2 | Delivery by 27-10-2023 ( Batta in 3 days ) |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 26-09-2023-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.09.26 17:59:30 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

EP 22 / 2017/in/
OS 106/ 2010
FAIR / DRAFT ORDER
Date : 26-09-2023